## தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் - 2019

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 2019 திசெம்பர் 31 இல்உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுஅத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2019திசெம்பர்31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம்எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து,நிறுவனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழிஅபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியானதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின்* கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்தப்படலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் பேரவையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக்

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பேரவையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவனத்தின் நீர்த்தாங்கியொன்றை திருத்தம் செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 273,700 ஆன மீண்டெழும் செலவினம் கட்டிடக் கணக்கில் மூலதனமாக்கப்பட்ட காரணத்தினால் கட்டிடக் கணக்கின் மீதி அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் கட்டிட பெறுமானத் தேய்வுக் கணக்கின் மீதி ரூபா 12,223 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டின் மிகை ரூபா 261,477 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நீர்த்தாங்கியை திருத்தம் செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 273,700 தொகை மூலதன தன்மையிலான செலவினமொன்றாக செலவிடப்பட்ட காரணத்தினால் கட்டிடக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.<br><br>இம்மேம்படுத்தல் செயற்பாடு காரணமாக நீர்த்தாங்கியின் பயன்படு ஆயுட்காலம் அதிகரிப்பதால் இது மூலதன செலவினமொன்றாக இனங்காணப்பட்டது. (SLPSAS இன் கீழ் நிலையான சொத்தாக இனங்காணல் 15 ஆம் அத்தியாயத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் மூலதனமாக்கப்பட வேண்டிய பெறுமதிகள் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிர்மாணம் ஆரம்பிக்கப்படாதிருந்த சிற்றுண்டிச்சாலை நிர்மாணிப்பதற்குரியதாக செலுத்தியிருந்த ரூபா 625,865 ஆன மதியுரைக் கட்டணங்கள் மற்றும் வேலை பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்ட நிறுவனத்தின் விடுதிக் கட்டிடத்தினதும் கற்பித்தல் நிலையத்தின் புனரமைப்பு செயற்பாடுகளுக்குரிய ரூபா 22,416,609 ஆன கிரயம் முடிவுறா வேலையாக கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக கட்டிடங்களாக மூலதனமாக்கப்பட்ட காரணத்தினால் கட்டிடங்களின் பெறுமதி அப்பெறுமானத்தினால் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 625,865/- ஆன மதியுரைக் கட்டணங்கள் முடிவுறா வேலைக் கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டு எதிர்காலத்தில் ஒப்பந்தம் வழங்கப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கட்டிட கணக்கிற்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நிறுவனத்தின் விடுதிக் கட்டிடத்தினதும் கற்பித்தல் நிலையத்தினதும் புனரமைப்பு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு முறையே 2020.01.29 மற்றும் 2020.02.05 ஆந் திகதிகளில் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன. எனினும் இக்கட்டிடங்கள் 2020.12.31 ஆந் திகதி வரை உடன்படிக்கை பெறுமதிக்கு ஈடாகும் அளவில் பூர்த்தி செய்யப்பட்டதன் காரணமாக உடன்படிக்கை பெறுமதி 2020.12.31 இல் உள்ளவாறு மூலனமாக்கப்பட்டுள்ளது. | அறிக்கையிடல் திகதியில் பயன்பாட்டிற்கு பொருத்தமான சொத்துக்களை மாத்திரம் மூலதனமாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மதியுரை கம்பனியிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிறுவனத்தின் விடுதிக் கட்டிடத்தினதும் கற்பித்தல் நிலையத்தின் புனரமைப்பு செயற்பாடுகளின் பெறுமதி தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட வேலை அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளாமல் அந்த புனரமைப்பு ஒப்பந்தத்திற்காக செலுத்த வேண்டிய மீதியொன்றாக ரூபா 7,024,580 தொகை கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தொர் மேற்படி பெறுமதியால் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | குறித்த நவீனமயப்படுத்தல் வேலைகள் 2019.12.31 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்ட தொகைக்கு உரியதாக பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அக்கொடுப்பனவிற்கு இருந்த கடப்பாடு செலுத்த வேண்டியதாக ரூபா 7,024,850/- கணக்குகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 2020 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் வேலை பூர்த்தி செய்யப்பட்டு நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. உரிய பிரதான பட்டியல் மதியுரை பொறியியலாளர் நிறுவனத்தினால் மதிப்பீடு செய்து கணக்கு கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன்னர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. இதன் காரணாக கடன்கொடுத்தோர் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையிடல் திகதியில் காணப்படும் கடன்கொடுத்தோர் பொறுப்புக்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்காக சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 5430,647 தொகையான கடன்பட்டோர் மீதிகளுக்காக மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் மீதிகளுக்காக மீதிகளுக்கான கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அநேகமான நிறுவனங்கள் அவ்வாறு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. விசேடமாக கொவிட் 19 தொற்று காரணமாக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தமை இதற்கான காரணங்களாகும். | உறுதிப்படுத்தப்படாத கடன் மீதிகளின் பௌதீக இருப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான தொழிற்பாட்டு விளைவுகள் ரூபா 105,809,643 மிகையொன்றாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 66,497,404ஆக இருந்தது. அதற்கமைய, நிதி விளைவுகளில் ரூபா 39,312,239 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் உருவாகும் வருமானம் ரூபா 38,282,752 ஆலும் வட்டி வருமானம் ரூபா 12,496,505 ஆலும் அதிகரித்திருந்தமையே இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

## 2.2 விகிதப் பகுப்பாய்வு

நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் முன்னைய ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை 1:9.05 முதல் 1:11.57வரையிலும் திரவத்தன்மை விகிதம் 1:8.43 இலிருந்து மீளாய்வாண்டில் 1:10.32 வரையிலும் அதிகரித்திருந்தது. இந்த அதிகரிப்பிற்கு பெறவேண்டிய கணக்கு மீதிகள் மற்றும் குறுங்கால வைப்புக்கள் அதிகரிப்பு என்பன பிரதான காரணங்களாக இருந்தன. முன்னைய ஆண்டின் 33.29 சதவீதமான இலாப விகிதம் 43.25 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன்,அதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் உருவான வருமானம் 38 மில்லியனாலும் வட்டி வருமானம் 12 மில்லியனாலும் அதிகரித்திருந்தமை இதற்கான பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடந்த 05 ஆண்டுகளின் தகவல்களை ஒப்பீடு செய்கையில் இறப்பர் மற்றும் தேயிலைக்காக நிறுவனத்தினால் நடாத்தப்பட்டிருந்த நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையும் அதற்காக பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கையிலும் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் இறப்பர், தேயிலைமற்றும் தென்னைக்காக நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை முறையே 69 சதவீதம், 46 சதவீதம் மற்றும் 50 சதவீதங்களால் வீழ்ச்சியுற்றும் அவற்றில் பங்குகொண்டோரின் எண்ணிக்கை முறையே 88 மற்றும் 54 சதவீதங்களால் குறைவடைந்தும் இறப்பர், தேயிலைமற்றும் தென்னைக்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக சமூகமளித்த எண்ணிக்கையும் முறையே 79 சதவீதம், 56 சதவீதத்தினாலும் 62 சதவீதத்தினாலம் குறைவடைந்திருந்த போதும் உரிய தேவைப்பாட்டின் பிரகாரம் விடயப் பரப்பினை திருத்துவதற்கும் பாடநெறிக் கட்டணங்களை திருத்தம் செய்து மாணவர்களை கவருவதற்கும் நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேயிலை,இறப்பர் மற்றும் தென்னை துறைக்காக சிறு தோட்ட உரிமையாளர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பொது திறைசேரி நிதி ஏற்பாடுகளில் இருந்து மேற்கொள்ளப்படுவதுடன் காலரீதியாக துறையின் தேவைப்பாட்டிற்கு இணங்கும் வகையில் குறித்த நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் கருத்துக்கள் கோரப்பட்டு வருடாந்தம் இப்பாடநெறிகளின் உள்ளடக்கம் மாற்றப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டத்தின் அளவில் குறைவு அரசின் நிதிஏற்பாடு குறைவடைந்தமை மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாகவும் அதிகமான நிகழ்ச்சித்திட்டங்கள் கைவிடப்பட்டமையே காரணமாகும் | அதிகளவு கேள்வி மற்றும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கரும்பு மற்றும் கறுவா இற்கான பயிற்சி நெறிகளை நடாத்துவதற்குப் போதிய பௌதீக மற்றும் மனித வளம் நிறுவனத்தில் காணப்பட்ட போதிலும் இது தொடர்பாக செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்தும் திட்டமிடப்பட்டவாறு பயிலுனர்களை சேர்த்து பயிற்சி நெறிகளை நடாத்துவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கரும்பு மற்றும் கறுவாவிற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அந்தந்த நிறுவனங்களால் நடாத்தப்படுவதால் எம்மால் அப்பிரிவுகளுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தும் தேவைப்பாடு இல்லையென அந்நிறுவனத்தினால் சுட்டிக் காட்டப்பட்டதால் எம்மால் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவுதற்கு தேவைப்பாடு ஏற்படவில்லை. | குறித்த நிறுவனத்துடன் கலந்துரையாடி சரியான தேவைப்பாட்டை இனங்கண்ட பின்னர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.. |
| (இ) | தேயிலைத் தொழிற்சாலை மற்றும் தேயிலை வெளிக்கள உத்தியோகத்தர்களுக்குரிய 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட 95 மாணவர்களால் NVQ04மட்டத்திலானதகைமையினை பூரணப்படுத்தியிருந்தத போதும் மூன்றாம்நிலை மற்றும் தொழில்துறை கல்வி ஆணைக்குழுவின் இணக்கப்பாடு இல்லாமையால் நிறுவனத்தினால் இதற்காக உரிய சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்துறைக் கல்வி ஆணைக்குழுவின் மதிப்பீடு தாமதமானமையால் அவர்களால் சான்றிதழ்களை வழங்குதல் தாமதிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது இந்நிலைமை மாற்றப்பட்டு அனைத்து மதிப்பீடு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சான்றிதழ்களை வழங்குவதனை துரிதப்படுத்த வேண்டும். |
| (ஈ) | 9,750 சிறு தோட்ட உடமையாளர்களை பங்குபெறச் செய்து தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் மரமுந்திரிகை என்பவற்றிற்காக 195 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதற்கு நிறுவனத்தினால் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் நிறுவனத்தினால் 5,414 சிறு தோட்ட உடமையாளர்களை பங்குபெறச் செய்து 106 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் இதன் பிரகாரம் எதிர்பார்த்த பிரகாரம் சிறுதோட்ட உடமையாளர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவுதற்கு நிறவனத்திற்கு முடியாமல் இருந்தது. | இந்நிறுவனத்தினால் சிறு தோட்ட உடமையாளர்களுக்காக 195 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த திட்டமிடப்பட்டிருந்த போதும் அதற்காக திறைசேரியிடமிருந்து கிடைத்த நிதிஏற்பாடுகளினல் குறைவின் பேரில் அந்நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையில் குறைவொன்று இடம்பெற்றிருந்தது. மேலும் இந்த ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் நாட்டில் காணப்பட்ட பாதுகாப்பு நிலைமை கருத்திற் கொள்ளப்பட்டு அநேகமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு முடியாதிருந்தது. | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) மீளாய்வாண்டில் தேசிய முகாமைத்துவ நிறுவகத்தினால் 41 வருமானத்தை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. இந்நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 1015 மாணவர்கள் பங்குபெறச் செய்யப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டில் 57 வருமானம் உழைக்கும் நிகழ்ச்சிகள் 1779 மாணவர்கள் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் வருமானம் உழைக்கும் நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 28 சதவீதத்தினாலும் மாணவர் பங்குபற்றல் 43 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது. | இவ்வருமானத்தை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக தெரிவு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அக்காலப்பகுதியில் நடாத்த முடியாமல் போனது. | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் வருமானத்தை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |